செ.வெ.எண்: 28 நாள்: 09.02.2017

# பத்திரிகைச் செய்தி

## 1.UDYOG AADHAR MEMORANDUM

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இதுவரையில் உத்தேச தொழிலகத்திற்கு EM Part-I என்றும், துவங்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலகத்திற்கு Part - II சான்று www.msmeonline.tn.gov.in எனும் இணைய தளத்தில் பெறுவது 2015 முடிய நடைமுறையில் இருந்து வந்தது.

பின்னர், மத்திய அரசின் 25.01.2016 தேதியிட்ட அறிவிப்பின்படி EM Part-I மற்றும் EM Part-IIக்கு பதிலாக உத்யோக் ஆதார் பதிவறிக்கை(UAM) என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பப்படிவம் எளிமையாக்கப்பட்டு கணிணி மூலம் பதிவினை செய்து கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல் மேற்படி பதிவினை www.udyogaadhar.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.ஒற்றைச் சாரளமுறை (Singlewindow Clearance)

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதியதாக துவங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான துறைச்சார்ந்த அனுமதியை ஒற்றைச்சாளர முறையில் விரைந்து வழங்கப்படுவதற்கென இணையதளம் (Singel window portal ) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண். 53 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை நாள்: 27.12.2012-ன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் அரசு அலுவலர்கள் தொழில் நிறுவன சங்க உறுப்பினர்கள் கல்வியாளர்கள், வங்கி அலுவலர்கள் ஆகியவர்களை உறுப்பினர்களாக கொண்ட ”தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு” அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாதத்திற்கு ஒரு முறை கூடி புதியதாக அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிகளை ஒற்றைச்சாளர முறையில் விரைந்து வழங்கப்படுகிறது.

தற்போது மேற்கண்ட புதியதாக அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிகளை ஒற்றைச்சாளர முறையில் விரைந்து வழங்க அரசு ஆணை எண். 13 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை நாள் 16.02.2016-ன்படி ”Single Window Portal” துவங்கப்பட்டுள்ளது. எனவே தொழில் முனைவோர் தங்களது தொழில் நிறுவனங்களுக்கான அனைத்து அனுமதிகளையும் ஒற்றைச்சாளர முறையில் பெறுவதற்கு மேற்கண்ட இணையதளம் மூலம் பதிவு செய்யுமாறு

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**